**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 476/2015**

Deposition of the witness for Prosecution **PW** 6
Name : சண்முகவடிவு
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (11.05.2026)

A1, A3 present, A2 died.

VC Start Time : 01.45 PM

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 2014 ஆம் வருடம் தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, 08.05.2014 ஆம் தேதி நிலையத்தில் இருந்த போது நிலைய குற்ற எண். 30/ 2013 வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான செங்கோட்டை காவல் நிலைய பொறுப்பு குற்றால காவல் நிலையம் காவல் ஆய்வாளர் அவர்கள் உத்தரவுப்படி, மேற்படி வழக்கில் தலைமறைவாக இருந்த ஒன்னாவது எதிரி செய்யது மஜித் என்பவர் கிடைத்த ரகசிய தகவல்படி தென்காசி பழைய பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தவரை காரணம் கூறி 17.00 மணிக்கு கைது செய்து 17:30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 15.06.2013 ஆம் தேதி அந்த காவல் நிலையத்தில் பொறுப்பு அதிகாரியாக இருந்தேனா என்றால் ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கை 15.06.2013 ஆம்

தேதி போடப்பட்டு நான் ஒரு வருடம் கழித்து தான் எதிரியை கைது செய்தேன் என்றால் 08.04.2014 ஆம் தேதி கைது செய்தேன். நான் எதிரியை கைது செய்ததற்கும், 15.06.2013 தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ரத்னபால் சாந்திக்கும் இடையில் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி யாரும் கிடையாதா என்றால் இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் செங்கோட்டை பொறுப்பு காவல் ஆய்வாளர் ஆவார். நான் சொன்ன மாதிரி எதிரியை தென்காசி பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்யவும் இல்லை. நான் மாண்புமிகு உச்சநீதிமன்ற கட்டளைகளை சரியாக பின்பற்றவில்லை என்றாலும், உறவினர்களுக்கும் சரியாக தகவல் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் அந்த காலகட்டத்தில் எந்தவித புலன் விசாரணையும் செய்யவில்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரியாக இந்த வழக்கினை கோப்பிற்கு எடுக்கவும் இல்லை என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி உத்தரவுப்படி எதிரியை கைது செய்தேன். எனக்கு எதிரி பேருந்து நிலையத்தில் நிற்பதாக ரகசிய தகவல் யாரிடம் இருந்து வந்தது என்று என்னிடம் காவல் ஆய்வாளர் சொல்லவில்லை என்றால் புலன்விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய உத்தரவுப்படி எதிரியை நான் கைது செய்தேன்.

**VC End Time : 01.55 PM**

Taken down by me / before me through teams VC interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-S.Ilayaraja,
Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 476/2015**

Deposition of the witness for Prosecution **PW** 5
Name : **இரத்தினபால் சாந்தி**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (11.05.2026)

A1, A3 present, A2 died.

முதல் விசாரணை

1. நான் தற்போது தென்காசி மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2013 ம் தேதி தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 13.00 மணிக்கு நிலைய பொறுப்பில இருந்தபோது சுமையாள் பேகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன்தன்மைப்படி காவல் நிலைய குற்ற எண்.30/2013, சட்டப்பிரிவு 498A, 406, 294(b), 506(ii) IPC and Sec 4 of TNPHW Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் புகார் மனுவையும், முதல் தகவ்ல அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். இதுசம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பவமாக நடந்த சம்பவங்கள் அனைத்தும் ரவண சமுத்திரத்தில் வைத்து நடந்தது என்றால் சரிதான். புகார் மனுவில் கடந்த 26.05.2013 தேதியில்

ரவணசமுத்திரத்தில் உள்ள எனது கணவரின் வீட்டிற்கு இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்கள் வந்தார்கள் என்று சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அதனை தெரிந்து புகார்தாரரும், அவரது தாயாரும் எதிரிகள் வீட்டிற்கு சென்று கேட்டதாகத்தான் புகாரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் எங்களிடம் புகார் மனு கொடுத்தது 15.06.2013 ம் தேதி என்றால் சரிதான். ஒரு மாதம் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கு காரணம் மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இரண்டாவது எதிரி செங்கோட்டை பஸ் ஸ்டாண்ட் ரோடு அருகிலுள்ள வீட்டில் குடியிருந்து வந்தார் என்பது விசாரணையில் துலங்குமா என்றால் சரிதான். மூணாவது எதிரி சேட்டு என்பவர் செங்கோட்டையில் ஜவஹர்லால் நேரு தெருவில் குடியிருந்ததாகத்தான் துலங்குகிறது என்றால் சரிதான். எவ்வளவு மஹர் கொடுத்தார்கள், என்ன நடந்தது என்ற விவரங்களையும் நாங்கள் பள்ளிவாசலில் இருந்து பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அவர்கள் விசாரித்து எழுதி வாங்கியதாகவும் சொல்லி உள்ளதில் அது சம்பந்தமான ஆவணங்கள் எதையும் நாங்கள் வாங்கி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராவண சமுத்திரத்தில் நடந்த நிகழ்வுகள் மற்றும் செங்கோட்டையில் நடந்த நிகழ்வுகள் எதையும் சொல்லாமல் 25.12.2003 திருமணம் ஆன நாள் முதல் 15.06.2013 புகார் கொடுக்கும் வரை பிரச்சனை என்று தான் குறிப்பிட்டு சொல்லி உள்ளோம் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல், சொன்ன நாளில், சொன்ன தேதியில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் ரவணசமுத்திரத்தில் குடியிருக்கவும் இல்லை என்றாலும், புகார்தாரர் செங்கோட்டையில் வந்து எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், அவர்களுக்குள்ளே பள்ளிவாசலில் பேசி முடித்துக் கொண்டார்கள் என்றாலும், அதை எல்லாம் மறைத்து ஒரு பொய்யான புகார் மனு ஒன்று என்னிடம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனை நான் முறையாக விசாரணை செய்யாமல் எந்த ஆவணங்களையும் வாங்கி பார்க்காமல் பிழையான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதவில்லை

**என்றால் சரியல்ல.**

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-S.Ilayaraja,
Judicial Magistrate, Shenkottai